செ.வெ. எண்: 263 நாள்: 20–04–2012

<u>செய்தி வெளியீடு</u>

அரசு ஆணை (நிலை) எண்.123, நிதி (ஊதியப்பிரிவு)த் துறை, நாள் 10–4–2012ல் திரு எஸ்.கிருஷ்ணன், இ.ஆ.ப., செயலாளர் (செலவினம்), நிதித்துறை அவர்களை தலைவராகவும், திரு ம.பத்மநாபன், கூடுதல் அரசு செயலாளர், மற்றும் திரு P.உமாநாத், இ.ஆ.ப., அரசு இணைச் செயலாளர், நிதித்துறை அவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு ஊதிய குறை தீர்க்கும் பிரிவு நியமிக்கப்பட்டு அரசு ஆணை ( நிலை ) எண்.71, நிதி(ஊதியப்பிரிவு)த் துறை, நாள் 26–2–2011ல் தமிழக அரசால் வெளியிடப்பட்ட உத்தரவை எதிர்த்து வழக்கு தொடர்ந்த அரசு அலுவலர் சங்கங்கள் உள்பட்ட அனைத்து அரசு அலுவலர் சங்கங்கள் / அனைத்து துறை தலைவர்கள் / தனிநபர்கள் மற்றும் அதனுடன் வழக்கு தொடர்ந்த மனுதாரர்கள் ஆகியோரிடம் உரிய மனுக்களை பெற்று பரிசீலித்து ஊதிய முரண்பாடுகளை களைவது குறித்து அரசுக்கு உரிய பரிந்துரை அறிக்கையினை மூன்று மாத காலத்திற்குள் சமர்ப்பிக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஊதிய குறை தீர்க்கும் பிரிவு இது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த மனுதாரர்கள் மற்றும் அரசு அலுவலர் சங்கங்களுடன் உயர்நீதிமன்றம் ஆணையிட்டபடி நேரடியாக விசாரணை நடத்தும். நேரடியான விசாரணைக்கு ஆஜராக விருப்பம் உள்ள வழக்குகளின் மனுதாரர்கள் மற்றும் அரசு அலுவலர்

சங்கங்கள் தங்களது கோரிக்கைகள் குறித்து ஊதிய குறை தீர்க்கும் பிரிவிற்கு அனுப்பி வைத்து தங்களது கோரிக்கையை பதிவு செய்துக் கொள்ளவேண்டும். இது தொடர்பாக தங்களது கோரிக்கைகளை அரசு துணைச் செயலாளர், நிதி(ஊதியப்பிரிவு)த்துறை, சென்னை–9 அவர்களிடம் நேரடியாகவோ அல்லது dspgrc@tn.gov.in என்ற மின்அஞ்சல் முகவரியில் **04–05–2012–க்கு** முன்னதாக பதிவு செய்யலாம்.

வழக்கு தொடர்ந்த சங்கங்கள் / மனுதாரர்கள் விசாரணைக்கு அழைப்பு கடிதம் அனுப்ப ஏதுவாக கீழ்காணும் விவரங்களை தெரிவிக்க வேண்டும்

1) சங்கத்தின் பெயர் / வழக்கு தொடர்ந்த மனுதாரர் :
2) அங்கீகரிக்கப்பட்ட தனிநபர் பெயர் / பதவி :
3) முகவரி :
4) தொடர்பு எண் :
5) மின்அஞ்சல் முகவரி ( இருப்பின்) :

தனிநபர் விசாரணை அழைப்பு குறித்த நாள் மற்றும் நேரம் தொடர்பாக ஒவ்வொரு சங்கத்தினருக்கும் அரசின் இணையதளத்திலும் ({ HYPERLINK "http://www.tn.gov.in" }) மற்றும் கடிதம் வாயிலாகவும் தனியே தெரிவிக்கப்படும்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**